552

உ

சிவமயம்.

நாச்சியாரம்மன் துணை.



11 MAR 1924

நாச்சியாரம்மன் பேரில்

# திருவிருத்தம்.

தஞ்சாவூர் ஜில்லா பாம்புரம்
வே. நாராயணஸாமி பிள்ளையவர்கள்
இயற்றியது.

காரைக்குடி
தனவைசிய ஊழியன் அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பெற்றது.
1924

Q25:47
N24
178887

11 MAR 1924

## சிறப்புப் பாயிரம்.

சீர்காழி மகா-ா-ா-ஸ்ரீ

ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளையவர்கள்

இயற்றியது.

திருவுறை பாண்டி நாட்டுத் திகழ்தரு நாச்சி யார்சேர்
மருவுறை புரத்து மேவு மறைமுதற் றூர்க்கை யம்மை
யருவுறை தோத்தி ரப்பா வழகுற வறைந்திட் டானால்
உருவுறை பாம்பு ரத்தி னோங்குவே ளாளச் செம்மல்

வேங்கடா சலமால் பெற்ற விளக்கனான் றமிழ்நூல் யாவு
மீங்கிவ னிகரா ரென்ன வெழுத்தொடு மைந்துங் கற்றுப்
பாங்கமை சைவ நூற்கள் பற்பல வாய்ந்து பெற்றி
யாங்கணும் புகழும் நாரா யணனெனுஞ் சாமி மாதோ.

600 008.
128837

உ

சிவமயம்.

நாச்சியாரம்மன் துணை.

# நாச்சியாரம்மன் பேரில்

# திருவிருத்தம்.

---

## காப்பு.

டாநாச்சி யார்புரத்து வாழ்நாச்சி யம்மைமேற்
பாநாட்டி யோர்பதிகம் பாடுதற்கு—மீனாட்சி
மைந்தன் பெருவயிறன் வள்ளி மணவாளக்
கந்தன்முன் னோன்கழல்கள் காப்பு.

பூமேவு நறுமாலை புனைகருங் குழலுநற்
பொற்சுட்டி யசைநெற் றியும்
பொட்டுமொண் வயிரமிழை யோலையணி குழைகளும்
புருவவிற் களுமணி மைசேர்
மாமேவு மருண்மடை திறந்தவுற் பலமல
ரைமானு மம்பகமு மெள்ளின்
மலரைநிகர் துண்டமுஞ் செவ்வல்லி மலர்பொருவு
வாயும்வண் டாளந கையுங்
கோமேவு சங்கநிகர் கண்டமும் கலசநிகர்
கொங்கையுங் குலவு கச்சுங்
கொண்டமா ணிக்கமுத லாயமணி மாலையுங்
கோலவா லிலையுத ரமும்

நாமேவ லுற்றவரி யெய்சிலம் படிகளும்
நான்காண வருவ தென்றோ
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. க.

மன்மேவு மண்டகோ டிகளெலா மாக்கின்ற
மாமலர்த் தவிசி னனும்
வளரிலங் காபுரத் தலைவன்சி ரம்பத்து
மண்விழப் புரியு முகிலும்
பொன்னுலக மேவுற்ற வாயிரங் கண்ணனும்
புலவருந் திசையு ளோரும்
புகலுமற் றவருமுறு துயரகன் றின்புறப்
பொருதுர்க் கனை மகிடன்
சென்னியை மிதித்திலகு கன்னியே திரிபுரந்
தீயெழப் புரியு நகையான்
திருமேவு மொருபாக மொருவாத செல்வியே
தீயனே னுக்குமருள் வாய்
நன்னகர மிந்நகர மல்லதில் லெனவுலகர்
நாடுறும் பெருமை வாய்ந்த
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. உ.

மங்கலம் புனைஞான நூலையொரு குரவனூர்
வாயிலாக் கேட்டறி கிலேன்
வளருமன் பொடுநினது கமலங்க ளடிகட்கு
வண்பூஜை செய்தறி கிலேன்
மங்குரு மூதறிவி னடியர்வரி னன்னவரை
வந்தனஞ் செய்தறி கிலேன்
மன்னுநின் பொற்கோயி றன்னையொரு ஞான்றேனும்
வலமாக வருத லறியேன்
தங்குற்ற தானமுந் தருமமும் மறைகளுணர்
சற்சனர்க் கீந்தறி கிலேன்
தறுகண்மை யேனக்கு பாதகப் புண்டங்கள்

7

தாங்குமொரு கலையனை யேன்
நங்குப லரும்புரிய வுடலெடுத் தேனென்னை
நற்கதியி லுறவருள் வையோ
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. ௫.

மெய்யொன்றி லாமலே பொய்பேசி யுங்களை
மிகவுண் டுழனு கர்ந்தும்
வேசைகளை யேபுணர்ந் துஞ்சூதை யாடியும்
வீணன கோட்டி கொண்டுங்
கையான தின்றிநாட் போக்குறுங் கயவனைக்
கட்டுமின் பிடியு மென்னக்
கரியபக டேறியே யியமனார் வருமுனங்
கன்னியரி மீதுவரு வாய்
ஐயையந் தரியமரி கார்த்தியா யனிகௌரி
யரியசுந் தரிசண் டிகை
ஆதிபக வதிவிசயை யென்றுநின் னாமங்க
ளளவிலா தனகூ றியே
நையலுறு மன்பினொடு மேத்தடியர் தங்கட்கு
நாடரிய பொருளுமுள தோ
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. ௬.

அங்கணெடு ஞாலத்து வறியவர்க ளிருமையறி
யாரென்ற வான்ற வர்மொழிக்
காமிலக் கியமாயமைந் துளேனெனி னும்மினது
அருள்சிறிது நணுகு மாயிற்
பங்கமுறு தீவினைக ணீங்கியிரு மையுமுறும்
பகருமெண் டோளி நீலி
பார்க்கவி சதானந்தி வீரிநா ரணிகலைகள்
பதினாறு முற்ற மதிபோல்
துங்கமே வுறுவதனி யடியவர்க ளெண்ணியாங்
குதவுற்ற சுகிர்த குணிநற்

025:487
724
128887

சோதியபி ராமியென் னம்மையென வானவர்கள்
சொற்றுதி கொளுந்தே வியன்
னங்குலவு தண்கழனி யலைகள்வீ சுறுமுத்தம்
நற்குலைத் தலையின் மேவும்
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. ௫.

மரமாக வரினுமது வழிநடையர் வெயில்வெப்ப
மாறவண் ணிழலை யீயும்
வன்கர மதாய்வரினு மேகாலி யர்க்கறுவை
மன்பாரந் தாங்கி யுதவும்
தாமிலா ஞமலிமற் கடமாயி னுங்கொண்ட
தலைவருக் குதவி யமையும்
தங்குபுற் கொடியா யுதிப்பினுன் கன்றுதி
தாமுணும் பயனை யெய்தும்
வரைமேவு ருதமணி வயிரமே விலையற்ற
வளரொளி மிகுத்த பொன்னே
மாணிக்க வல்லியே யடியவர்க ளிதயதா
மரைமேவி வதியன் னமே
நானுப் பிறந்தியா னென்னபய னுற்றனன்
நானிலத் தவர்க ளேத்தும்
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. ௬.

கல்லாத வறிவிற்க டைப்பட்ட நாயினேன்
கற்றவர்க ணட்புமறி யேன்
கடிமாலை சூடுகுழன் மடவார்கள் பூவிதிக
ளைத்தேட நாளுமுழல் வேன்
இல்லையொரு பொருளுமெனும் வறியவர்க் கெப்பொருளு
மில்லையென வேயிசைந் தேன்
ஏர்கொண்ட நின்னடித் தாமரைக ளைக்கனவி
லேனுமொரு போதும் நினையேன்

வல்லவடி வாள்கொண்ட செங்கைப்பி ராட்டியே
மகிடனைச் செற்ற மயிலே
மலிகருணை நிதியமே யொலிதிரைக் கடலூடு
வாராத தெள்ளமிழ் தமே

நல்லசிற் பத்தியல்பு நிறையுமணி மாடங்க
ளுகளூர் வரையு யர்ந்த
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. எ.

சிந்துகு மூற்றவிந் நிலவுலக மீதிலே
சென்மித்த னன்ற ருணனுய்த்
திகழ்பொழுதை யாதியா வார்த்திக மெனும்பொழுது
சேர்ந்த விந்நாள் காறுமே

சிந்தாகு லத்தினு னெந்திருந் தேனிஃது
தீவினைப்ப யனென் பரால்
செப்புமித் தீவினையின் முதலறுத் திடவெனிற்
றேவிநிற் கியலா ததோ

செந்தாம ரைத்தவிசி னுற்றநான் முகனுதி
தேவரும் முனிவர் களுஞ்
செயசெய வெனப்போற்றி நிற்குநின் றிருமுகந்
தீயனேன் காண்ப துளதோ

நந்தாத செல்வமலி வைசியர் குலம்பரவி
நல்லருளை யெய்தி நிற்கும்
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. அ.

மாவாதி யாயுற்ற புன்பிறப் பெய்தாது
மானிடப் பிறவி வந்தும்
மறையாக மங்களிற் கூறுற்ற பெருமையுறு
வண்சைவ சமய முற்றும்

கோவார்ந்த கல்வியொடு ஞானமெய் தாதியான்
குவலயத் தழித லழகோ

குற்றமெத் தனைமகவு புரியினு மன்னையவை
கொள்ளாது தள்ள லியல்பே
தேவன் பராசத்தி யொன்றதே வினியோக
மாம்பொழுது நாற்சத் தியாய்த்
திகழுமவை யுட்சயாச் சத்திநீ யென்பருன்
சீர்ப்பெருமை கூற வசமோ
நாவலர்கள் பிரசங்க மோவுறு திலகுபல
நல்லகழ கங்கண் மேவும்
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. ௯

GS5:47
M24

சந்தமுறு வெண்ணீறு மக்கமா மணிகளுந்
தரித்தபெரி யோர்க ணேரிற்
சரணம்ப ணிந்தவர்கள் குற்றேவல் புரிகிலேன்
றந்திடைக் கும்பத் தனக்
கந்தமுறு வீயார்க ருங்குழற் கன்னியர்கள்
கண்வலைப் பட்டுழலு வேன்
கருதரிய பாவியேன் ஞானமில் லேனினது
கான்ம லர்க்கா ளாவனோ
சந்தமுறு சூலிகொற் றவைகொற்றி கௌரிசக்
கரபாணி விசயை விந்தை
தகுவிமலை வீரமே வுறுசெல்வி யுலகெலாந்
தந்தபா லைக்கி ழத்தி
நந்தனி களப்பொறி யுவந்தமரு மத்தனென்று
நாரணன் சேர்த்தங் கையே
நாச்சியார் புரமென்னு மாட்சியார் தலமேவு
நாச்சியா ரம்மை யுமையே. ௰

125887
-600 008

வாழி.

வாழிசெயங் கொண்டவிநா யகர்கமல மலரடிகள்
வாழியுமா மகேஸ்வரர்தம் மான்முதலோர் தொழுகழல்கள்
வாழியுமா மகேஸ்வரிதன் மறைச்சிலம் பேய்பதங்கள்
வாழிமணி வேற்குமர வள்ளலார் தாளிணையே.